# வண்ணாரப்பேட்டை - டி.எம்.எஸ். இடையே இன்று முதல் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

## பாதுகாப்பு கமிஷனர் நேரில் ஆய்வு




சென்னை, ஜன.19-

வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரெயில் இயக்குவதற்கான சோதனை ஓட்டம் இன்று (சனிக்கிழமை) முதல் 3 நாட்கள் நடக்கிறது. இதை மெட்ரோ ரெயில் பாதுகாப்பு கமிஷனர் நேரில் ஆய்வு செய்கிறார்.

### பாதுகாப்பு கமிஷனர் ஆய்வு

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க கொண்டுவரப்பட்டது தான் மெட்ரோ ரெயில் சேவை. முதற்கட்டமாக கோயம்பேடு-ஆலந்தூர் இடையே சேவை தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சென்டிரல்-விமானநிலையம், பரங்கிமலை-விமானநிலையம், விமானநிலையம்-டி.எம்.எஸ். இடையே ரெயில் சேவை விரிவாக்கப்பட்டு மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் டி.எம்.எஸ்.-வண்ணாரப்பேட்டை இடையேயான மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வந்தன. அதற்கான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், மெட்ரோ ரெயில் பாதுகாப்பு கமிஷனர் கே.ஏ.மனோகரன் இன்று (சனிக்கிழமை) முதல் நாளை மறுதினம் (திங்கட்கிழமை) வரை நேரில் ஆய்வு செய்கிறார்.

### சோதனை ஓட்டம்

டி.எம்.எஸ்.-வண்ணாரப்பேட்டை இடையேயான 10 கிலோ மீட்டர் தூரத்தில், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்டிரல், ஐகோர்ட்டு, மண்ணடி, வண்ணாரப்பேட்டை ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்கள் வருகின்றன.

இந்த ரெயில் நிலையங்களுக்கு இடையே இன்றும் (சனிக்கிழமை), நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடைபெற இருக்கிறது. இதை மெட்ரோ ரெயில் பாதுகாப்பு கமிஷனர் கே.ஏ.மனோகரன் டிராலி வண்டி மற்றும் மெட்ரோ ரெயில் ஆகியவற்றில் ஏறி பயணம் செய்து சோதனை செய்கிறார். அதில் ஒரு நாள் அதிவேகமாக மெட்ரோ ரெயிலை இயக்கியும் சோதனை செய்து பார்க்கிறார்.

### அதிகாரிகளுடன் ஆலோசனை

பாதுகாப்பு கமிஷனர் கே.ஏ.மனோகரன் தலைமையில் 2 முதல் 3 குழுவினர் டி.எம்.எஸ்.-வண்ணாரப்பேட்டை இடையேயான ரெயில் நிலையங்களையும், அங்கு செய்யப்பட்டு இருக்கும் பல்வேறு பணிகளையும் ஆய்வு செய்கின்றனர்.

வருகிற 21-ந் தேதி (நாளை மறுதினம்) மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகளுடன் பாதுகாப்பு கமிஷனர் ஆலோசனை நடத்துகிறார். சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்ததும், அது தொடர்பான அறிக்கையை பாதுகாப்பு கமிஷனர் அளித்தால், வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரெயில் சேவை தொடங்கிவிடும்.

அதன்படி, இந்த மாத இறுதிக்குள் வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ். இடையே மெட்ரோ ரெயில் சேவை தொடங்குவதற்கான வாய்ப்பு அதிகளவில் இருப்பதாக மெட்ரோ ரெயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.